# April 1, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தில்லியில் நடைபெற்ற விழாவில் 'தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்' நூலுக்காக 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதை சாகித்திய அகாதெமி தலைவர் மாதவ் கௌசிக், துணைத் தலைவர் குமுத் சர்மா ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன். இந்த நிகழ்வில் மொத்தம் 24 எழுத்தாளர்களுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

2. இஸ்ரேலில் பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டு யூதர்களைக் கொலை செய்யும் பாலஸ்தீனர்களுக்குக் கட்டாய மரண தண்டனை விதிக்கும் புதிய சட்டம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(i) பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வலதுசாரி கூட்டணி அரசு கொண்டு வந்துள்ள இச்சட்டம், சர்வதேச அளவில் கண்டனங்களையும், விவாதங்களையும் கிளப்பியுள்ளது. 120 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில், இச்சட்டத்துக்கு ஆதரவாக 62 வாக்குகள் கிடைத்தன.

(ii) இப்புதிய சட்டத்தின்படி, மேற்கு கரை பகுதியில் உள்ள நீதிமன்றங்களில் ராணுவ தண்டனை பெற்ற பாலஸ்தீனர்களுக்கு மரண தண்டனை மட்டுமே முதன்மை தீர்ப்பாக வழங்கப்படும். இஸ்ரேல் நாட்டின் இறையாண்மையைச் குறிப்பாக, சீர்குலைக்கும் நோக்கில் நடத்தப்படும் கொலைக் குற்றங்களுக்கு இத்தண்டனை விதிக்கப்படும்.

(iii) மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட 90 நாள்களுக்குள் அதனை நிறைவேற்ற வேண்டும் என்றும், இதில் பொதுமன்னிப்பு வழங்க அதிபருக்கு கூட அதிகாரம் கிடையாது என்றும் சட்ட விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

(iv) முன்னதாக, 1954-இல் இஸ்ரேல் கொலைக் குற்றங்களுக்கான மரண தண்டனையை ரத்து செய்தது. அதன்பின்னர், கடந்த 1962-இல் நாஜி போர்க்குற்றவாளி அடால்ஃப் ஐச்மேனுக்கே கடைசியாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. தற்போது 60 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மரண தண்டனை நடைமுறைக்கு வந்துள்ளது.

(v) இச்சட்டத்தை முன்மொழிந்த இஸ்ரேல் உள்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் இத்தாமர் பென் கிவீர், நாடாளுமன்றத்துக்குத் தூக்குக்கயிறு வடிவிலான பேட்ஜ் அணிந்து வந்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

(vi) இச்சட்டத்தை பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் கடுமையாகச் சாடியுள்ளார். ஹமாஸ் உள்ளிட்ட ஆயுதக் குழுக்கள், இச்சட்டத்துக்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது மீண்டும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தப் போவதாக எச்சரித்துள்ளன.

(vii) ஐரோப்பிய நாடுகளும், ஐ.நா.சபையும் இச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், இஸ்ரேல் உச்சநீதிமன்றத்தில் இச்சட்டத்தை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

3. ரஷியாவின் பால்டிக் கடல் பகுதியில் அமைந்துள்ள அந்நாட்டின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி முனையமான உஸ்த் லுகா துறைமுகத்தைக் குறிவைத்து உக்ரைன் அதிகாலை மீண்டும் ட்ரோன் தாக்குதலை நடத்தியது.

(i) கடந்த ஒரு மாத காலமாக ரஷியாவின் எண்ணெய் ஏற்றுமதி கட்டமைப்புகளைச் சிதைக்கும் நோக்கில் உக்ரைன் தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது.

(ii) உஸ்த் லுகா, பிரிமோர்ஸ்க் ஆகிய முக்கியத் துறைமுகங்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களால், ரஷியாவின் ஒட்டுமொத்த எண்ணெய் ஏற்றுமதித் திறனில் சுமார் 40 சதவீதம் முடங்கியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, உஸ்த் லுகா துறைமும் மீது கடந்த மார்ச் 22-ஆம் தேதி தொடங்கி, நடத்தப்படும் 5-ஆவது தாக்குதல் இதுவாகும்.

(iii) தினசரி சுமார் 7 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யைக் கையாளும் இத்துறைமுகம் தொடர்ந்து

தாக்கப்படுவது ரஷிய பொருளாதாரத்துக்குப் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

(iv) உக்ரைனின் இத்தகைய நடவடிக்கைகளை 'பயங்கரவாதத் தாக்குதல்' என ரஷிய அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் சாடியுள்ளார்.

(v) ரஷியாவின் முக்கியக் கட்டமைப்புகளைப் பாதுகாக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இருப்பினும் இத்தகைய தாக்குதல்களில் இருந்து 100 சதவீதம் பாதுகாப்பு அளிப்பது சவாலானது என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(vi) முன்னதாக, ஈரான் போர் காரணமாக சர்வதேச சந்தையில் எரி சக்தி விலைகள் அதிகரித்து வரும் நிலையில், இத்தகைய தாக்குதல்களைக் குறைத்துக் கொள்ளுமாறு சில நட்பு நாடுகள் 'சமிக்ஞை' விடுத்துள்ளதாக உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி கூறியது குறிப்பிடத்தக்கது.

(vii) கியூபாவுக்கு உதவி:

- அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளையும் மீறி, 7.3 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யுடன் ரஷியாவின் சரக்குக் கப்பல் கியூபாவைச் சென்றடைந்தது.
- கடந்த 3 மாதங்களில் கியூபாவுக்கு வந்துள்ள முதல் எண்ணெய் கப்பல் இது என்பதால், அந்நாட்டு மக்கள் மற்றும் அமைச்சர்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.
- அமெரிக்க தடையால் மெக்ஸிகோ போன்ற நாடுகள் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தியுள்ள சூழலில், ரஷியாவின் இந்த உதவி எங்களின் நெருக்கடியைச் சமாளிக்கப் பெரிதும் உதவும் என கியூப அதிகாரிகள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

4. மத்திய கிழக்கு போர் பதற்றம் காரணமாக உலகளாவிய எரிசக்தி சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால், அமெரிக்க டாலரின் மதிப்பு 2022-ஆம் ஆண்டு செப்டம்பருக்குப் பிந்தைய சிறந்த மாதாந்திர வளர்ச்சியை (சுமார் 3 சதவீதம்) எட்டியுள்ளது.

(i) ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால் ஏற்பட்ட விநியோகத் தடை, கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் ஐரோப்பா மற்றும் ஜப்பான் நாடுகளின் பொருளாதாரத்தைப் பாதித்துள்ளது. இதனால், டாலரின் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டது.

(ii) ஆனால், அதற்கு மாறாக வரும் நாள்களில் மதிப்பு உயரும் என்று நம்பிக்கையில், உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் 700 கோடி மதிப்பீட்டில் டாலரில் முதலீடு செய்துள்ளனர்.

(iii) உலகப் பொருளாதார வளர்ச்சி குறித்த கவலைகளுக்கு மத்தியில், முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடாக டாலரை நோக்கி படை யெடுப்பதே இந்த அதிரடி உயர்வுக்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

(iv) உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளராக அமெரிக்கா உருவெடுத்துள்ள நிலையில், உலகளாவிய எரிசக்தி விலை உயர்வு அந்த நாட்டின் நாணயத்துக்கு கூடுதல் வலு சேர்த்துள்ளது. பண வீக்க அச்சம் காரணமாக அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதங்களைக் குறைக்கும் என்ற எதிர்பார்ப்பு குறைந்து வருவதும் டாலரின் எழுச்சிக்கு சாதகமாக அமைந்துள்ளது.

5. நாட்டின் வரி விதிப்பு முறையில் ஒரு மைல்கல்லாக, 1961-ஆம் ஆண்டின் பழைய வருமான வரிச் சட்டத்துக்குப் பதிலாக கொண்டுவரப்பட்ட வருமான வரிச் சட்டம் 2025 புதன்கிழமை (ஏப். 1) முதல் நாடு முழுவதும் அமலுக்கு வருகிறது. இத்துடன் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட புதிய வரி விதிப்புகள் மற்றும் சலுகைகளும் புதன்கிழமை தொடங்கும் புதிய 2026-27 நிதியாண்டு முதல் நடைமுறைக்கு வருகின்றன. சாமானியர்கள் முதல் பெருநிறுவனங்கள் வரை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:

(i) எளிய நடைமுறையுடன் புதிய சட்டம்:

60 ஆண்டுகளுக்கும் மேல் நடைமுறையில் இருந்த பழைய சட்டத்துக்குப் பதிலாக, தற்போதைய சூழலுக்கு ஏற்ப வரி செலுத்துவோர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சட்டப் பிரிவுகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

(ii) வரி ஆண்டு:

- இதுவரை நடைமுறையில் இருந்த 'முந்தைய ஆண்டு', 'வரி மதிப்பீட்டு ஆண்டு' என்ற குழப்பமான வேறுபாடுகள் நீக்கப்பட்டு, இனி 'வரி ஆண்டு' என்ற ஒரே நடைமுறை பின்பற்றப்படும்.

(iii) தாமத தாக்கலுக்கு சலுகை:

- வருமான வரி கணக்கைத் தாக்கல் செய்யக் காலக்கெடு முடிந்த பின்னரும், அபராதமின்றி டி.டி.எஸ். ரீஃபண்ட் கோர புதிய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(iv) இடைக்கால நடைமுறை:

- வரும் ஜூலைக்குள் தாக்கல் செய்யப்படும் 2025-26 நிதியாண்டுக்கான கணக்குகள் பழைய சட்டத்தின்படியே கையாளப்படும். ஜூன் முதல் செலுத்தப்படும் முன்பண வரி புதிய சட்டத்தின்கீழ் அமையும்.

(v) எஃப்&ஓ வர்த்தகம்-ஊக வணிகத்தைக் குறைக்க வரி உயர்வு:

- செபி ஆய்வின்படி, கடந்த 2024–25 நிதியாண்டில் மட்டும் எ ஃப் & ஓ வர்த்தகத்தில் சிறு முதலீட்டாளர்கள் ரூ.1.05 லட்சம் கோடி நஷ்டத்தைச் சந்தித்தனர். இதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இந்த வர்த்தகம் மீதான பரிவர்த்தனை வரி உயர்த்தப்பட்டுள்ளது.
- வர்த்தகத்துக்கு ஃபியூச்சர்ஸ் 0.02 சதவீதத்திலிருந்து 0.05 சதவீதமாகவும், ஆப்ஷன்ஸ் வர்த்தகத்தில் பிரீமியம் மற்றும் எக்ஸர்சைஸ் மீதான வரி 0.15 சதவீதமாகவும் (முன்பு முறையே 0.1 % சதவீதம் மற்றும் 0.125 சதவீதம்) அதிகரிக்கப்பட்டுள்ளது.

(vi) வெளிநாட்டுப் பயணம் மற்றும் கல்வி:

- நடுத்தர வர்க்கத்தினருக்குப் பயன் தரும் வகையில், வெளிநாட்டுச் சுற்றுலா மற்றும் மருத்துவ, கல்வித் தேவைக்காக அனுப்பப்படும் இதர பணப் பரிமாற்றங்களுக்கான டிசிஎஸ் வரி 2 சதவீதமாக கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(vii) தரவு மையங்களுக்கு 2047 வரை வரி விலக்கு:

- தரவு மையங்கள் துறையில் நாட்டை உலகளாவிய தலைமையாக மாற்றும் நோக்கில், இந்தியாவில் தரவு மைய சேவைகளைப் பெறும் அல்லது சொந்தமாக தரவு மையங்களை அமைக்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 2047-ஆம் ஆண்டு வரை 20 ஆண்டுகாலத்துக்கு வரி விலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(viii) ஐடி துறைக்கு சலுகை:

- மென்பொருள் ஏற்றுமதி மற்றும் ஐடி நிறுவனங்களுக்கான 'சேஃப் ஹார்பர்' வரம்பு ரூ.300 கோடியிலிருந்து ரூ.2,000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.
- 'சேஃப் ஹார்பர்' என்பது வரித் துறையினரின் தேவையற்ற சோதனைகள் மற்றும் சட்ட சிக்கல்களில் இருந்து தப்பிக்க நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஒரு பாதுகாப்பு வரம்பாகும்.

6. நாட்டின் மிகப்பெரிய விமானப் போக்குவரத்து நிறுவனமான இண்டிகோ, சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் (ஐஏடிஏ) தற்போதைய தலைவரும், அனுபவம் வாய்ந்த விமானியுமான வில்லியம் வால்ஷை தனது புதிய தலைமைச் செயல் அதிகாரியாக (சிஇஓ) நியமித்தது.

(i) கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெரும் செயல்பாட்டுத் தடங்கல்களைத் தொடர்ந்து, நிறுவனத்தின் முன்னாள் சிஇஓ பீட்டர் எல்பெர்ஸ் திடீரென பதவி விலகிய நிலையில் இந்த முக்கிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

7. இந்தியாவின் நட்சத்திர சர்ஃப்பிங் வீரர்கள்,

வீராங்கனைகள் பங்கேற்கும் லிட்டில் அந்தமான் புரோ சர்ஃப்பிங் 2026 போட்டி வரும் ஏப்.9-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை அந்தமான் நிகோபார் தீவுகளின் பட்லர் பே கடற்ரையில் நடைபெறவுள்ளது.

(i) நிகழாண்டு ஜப்பானில் ஆசியப் போட்டி நடைபெறும் நிலையில், அதில் முதன்முறையாக இந்திய சர்ஃப்பிங் அணி பங்கேற்கிறது. இதற்கு தயாராகும் வகையில் இந்த போட்டி நடைபெறுகிறது.

(ii) இந்திய சர்ஃப்பிங் சம்மேளனம், அந்தமான் தீவுகள் சுற்றுலாத் துறை சார்பில் சீனியர் மற்றும் ஸ்டேண்ட் அப் பேடல், பிரிவுகளில் போட்டி நடைபெறும். கடந்த 2024 ஆசிய சர்ஃப்பிங் சாம்பியன்ஷிப்பில் இந்திய அணி சிறப்பாக செயல்பட்டு ஆசியப் போட்டிக்கு தகுதி பெற்றது. ஜப்பானின் எய்ச்சி-நகோயாவில் நடைபெறும் போட்டியில் இந்திய சார்பில் தலா இரண்டு ஆடவர், மகளிர் பங்கேற்கலாம்.

8. இந்தியாவின் நம்பர் 1 ஸ்குவாஷ் வீரர் அபய் சிங், மகளிர் பிரிவில் அனாஹத் சிங் ஆகியோர் ஆசிய ஸ்குவாஷ் கூட்டமைப்பின் 2025 ஆண்டின் சிறந்த வீரர், ஜூனியர் பிரிவில் சிறந்த வீராங்கனை விருதுக்கு தேர்வு பெற்றுள்ளனர். மேலும் ஆண்டின் சிறந்த அணியாகவும் இந்திய அணி தேர்வு பெற்றது.

(i) ஆடவர் பிரிவில் உலகின் தரவரிசையில் 25-ஆம் இடத்தில் அபய் சிங் உள்ளார். ஆசியப் போட்டி, ஆசிய சாம்பியன்ஷிப்பில் பல்வேறு பதக்கங்களை வென்ற அபய், கடந்த 2025-இல் முதலாவது கலப்பு அணி உலகக் கோப்பையில் பட்டம் வென்ற இந்திய அணியில் இடம் பெற்றிருந்தார்.

(ii) மகளிர் உலகத் தரவரிசையில் 20-ஆம் இடத்தில் உள்ள அனாஹத் சிங், கடந்த 2025 உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் வெண்கலம் வென்றிருந்தார். மேலும் கலப்பு அணி உலகக் கோப்பையில் தங்கம் வென்ற அணியிலும் இடம் பெற்றிருந்தார்.

9. உலகச் சந்தையில் செமிகண்டக்டர் விநியோகிப்பாளராக இந்தியா வலிமை பெற்று வருகிறது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

(i) கெய்ன்ஸ் செமிகான் நிறுவனத்தின் ஒப்பந்த செமிகண்டர் ஆலையை குஜராத்தின் சனந்த் மாவட்டத்தில் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

- ஒருபுறம் செமிகண்டக்டர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான கட்டமைப்பை வேகமாக இந்தியா உருவாக்கி வருகிறது. மறுபுறம் மூலப் பொருள்கள் விநியோகச் சங்கிலியை மேம்படுத்த பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- செமிகண்டக்டர், செயற்கை நுண்ணறிவு மற்றும் அரிய கனிமங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் 'பேக்ஸ் சிலிக்கா' உத்திசார் கூட்டணியில் இந்தியா அண்மையில் இணைந்ததே இதற்கு சான்று.
- மேலும் அரிய கனிமங்கள் உற்பத்தியில் தற்சார்பு நிலையை அடைய தேசிய அரிய கனிமங்கள் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதுதவிர கனிமங்கள் மறுசுழற்சியை ஊக்குவிக்க ரூ.1,500 கோடி மதிப்பிலான திட்டமும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

(ii) தென்இந்தியாவின் முக்கிய வழித்தடம்:

- ஆந்திரம், தமிழகம் மற்றும் கேரளத்தில் அரிய கனிமங்கள் வழித்தடம் அமைக்கப்படவுள்ளது. சுரங்கம், கனிம உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு என ஒருங்கிணைந்த வலையமைப்பை இந்த வழித்தடம் உறுதிப்படுத்தும். உள்நாட்டிலேயே தேசிய கனிம சேகரிப்பு மையம் அமைக்க வேண்டும் என்பதே நமது இலக்கு.
- 30 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன்பே இதுபோன்ற முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இத்துறையில் இந்தியா மேலும் முன்னேற்றம் அடைந்திருக்கும்.

(iii) சிலிக்கான் பள்ளத்தாக்குக்கான பாலம்:

- சனந்த் நகரில் அமைந்துள்ள இந்த செமிகண்டக்டர் ஆலை அமெரிக்காவின் சிலிக்கான பள்ளத்தாக்குக்கான (நவீன தொழில்நுட்ப மையம்) புதிய பாலம் போன்றது. கலிஃபோர்னியாவில் உள்ள நிறுவனத்துக்கு இங்கிருந்து நுண்ணறிவு திறன் மாதிரிகளை அனுப்ப முடியும்.
- சர்வதேச புவி அரசியல் சூழலால் சிப்கள், அரிய கனிமங்கள், எரிசக்தி போன்றவற்றின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் உலகச் சந்தையில் செமிகண்டக்டர் விநியோகிப்பாளராக இந்தியா வலிமை பெற்று வருகிறது.

(iv) செமிகண்டக்டர் மேம்பாட்டுத் திட்டங்கள்:

- 2021-இல் செமி கண்டக்டர் இயக்கத்தை இந்தியா தொடங்கியது. அதன்கீழ் 10 மாநிலங்களில் ரூ.1.60 லட்சம் கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த பட்ஜெட்டில் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.
- மிக விரைவில் செமிகண்டக்டர் வடிவமைப்புக்கு 85,000 நிபுணர்கள் தயார் செய்யப்படவுள்ளனர். 400-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்களுக்கு நவீன வடிவமைப்பு உபகரணங்களை அணுகும் வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.
- இந்தியாவில் செமிகண்டக் டர் சந்தை ரூ.4 லட்சம் கோடியாக உள்ளது. வருங்காலத்தில் இது ரூ.9 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10. குஜராத் மாநிலம் காந்திநகர் மாவட்டம் அருகே உள்ள கோபா கிராமத்தின் ஸ்ரீ மஹாவீர் சமண ஆராதனா கேந்திரா வளாகத்தில் 'சாம்ராட் சம்ப்ரதி' என்ற சமண அருங்காட்சியத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

11. மேற்காசிய போர் காரணமாக தட்டுப்பாடு அதிகரித்து வரும் சூழலில், உள்நாட்டு உற்பத்தி இயற்கை எரிவாயு விலையை உயர்த்தி மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

- அதன்படி, 'எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்' மற்றும் 'ஆயில் இந்தியா ஆகிய மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயுவின் விலையை ஒரு 'எம்எம்பிடியு அலகு ரூ. 632.79 (6.75 டாலர்) ஆக இருந்ததை ரூ. 657.57 (7 டாலர்) - ஆக உயர்த்தி மத்திய அரசு அறிவிக்கை செய்துள்ளது. மத்திய அரசு கடந்த 2023-இல் அனுமதித்த இயற்கை எரிவாயு விலை நிர்ணய நடைமுறை அடிப்படையில் இந்த விலை உயர்வு செய்யப்பட்டுள்ளது.
- முன்னதாக,2023-24 மற்றும் 2024-25 ஆகிய இரு நிதியாண்டுகளுக்கு ஒரு 'எம்எம்பிடியு உள்நாட்டு உற்பத்தி இயற்கை எரிவாயுவின் விலை ரூ. 609.58(6.5 டாலர்) ஆக இருந்த நிலையில், கடந்த 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியில் தொடங்கிய நிதியாண்டில் 0.25 டாலர் அளவுக்கு உயர்த்தப்பட்டு ரூ. 632.79 (6.75 டாலர்) ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது ஒரு 'எம்எம்பிடியு' இயற்கை எரிவாயு 7 டாலராக உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்த விலை உயர்வு, உர நிறுவனங்கள் மற்றும் சிஎன்ஜி (வாகனங்களுக்கான இயற்கை எரிவாயு) மற்றும் குழாய் வழி சமையல் எரிவாயு பயனாளர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது.

12. 2026-27-ஆம் ஆண்டுக்கான வருமான வரிக் கணக்கு தாக்கலுக்கான அனைத்துப் படிவங்களையும் வருமான வரித் துறை அறிவிக்கை செய்துள்ளது.

(i) சிறு மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான படிவம் 1 முதல் 4 வரையிலான வருமான வரிக் கணக்கு தாக்கல் படிவங்கள் அறிவிக்கை செய்யப்பட்ட நிலையில், புதுப்பிக்கப்பட்ட வருமான வரி தாக்கல் செய்வதற்கான படிவங்கள் 2,3,5,6 மற்றும் 7 வரையிலான படிவங்கள் அறிவிக்கை செய்யப்பட்டன.

(ii) அதன்படி, தனிநபர்களும், வர்த்தகர்கள் மற்றும் பிற துறை சார்ந்தவர்கள் 2025-26-ஆண்டில் ஈட்டிய வருவாய்க்கான கணக்கைத் தாக்கல் செய்யத் தொடங்கலாம் என வருமான வரித் துறை தெரிவித்துள்ளது. தனிநபர்கள் மற்றும் தங்களின் கணக்கை தணிக்கை செய்யத் தேவையில்லாதவர்களும் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய ஜூலை 31 கடைசி நாளாகும்.

(iii) ஆண்டு வருவாய் ரூ.50 லட்சம் வரை உள்ள இந்தியாவில் வசிக்கும் தனி நபர்கள் படிவம் 1-ஐ (சஹஜ்) தாக்கல் செய்யலாம். இவர்கள் ஊதியம், ஒரு குடியிருப்பு, பிற வளங்கள் (வட்டி) மற்றும் ஆண்டுக்கு ரூ.5,000 வரையிலான வேளாண் வருமானம் ஆகியவற்றின் மூலம் வருவாய் ஈட்டுபவர்களாக இருக்க வேண்டும்.

(iv) தொழில் மற்றும் பணிசார் சேவைகள் மூலம் ஆண்டுக்கு ரூ.50 லட்சம் வரை வருவாய் ஈட்டும் தனிநபர்கள், ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் மற்றும் நிறுவனர்கள் படிவம் -4-ஐ (சுகம்) தாக்கல் செய்யலாம்.

(v) வர்த்தகம் மூலம் கிடைக்கும்லாபம் மற்றும் ஆதாயங்களில் இருந்து அல்லாமல், மூலதன ஆதாயங்களிலிருந்து வருவாய் ஈட்டும் தனி நபர்கள் மற்றும் ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் படிவம் 2-ஐ தாக்கல் செய்ய வேண்டும்.

(vi) தனி உரிமையுடைய வர்த்தகம் அல்லது தொழில் மூலம் வருவாய் ஈட்டும் தனி நபர்கள் மற்றும் ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் படிவம் 3- ஐ தாக்கல் செய்ய வேண்டும்.

(vii) நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் கூடிய வர்த்தக பங்குதாரர்கள், கூட்டுறவு சங்கங்கள் படிவம் 5-ஐ தாக்கல் செய்ய வேண்டும்.

(viii) நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் படிவம் 6, அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் படிவம் 7- ஐ தாக்கல் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது